சிறப்பு இதழ்

# உருமு தனலெட்சுமி கல்வி நிறுவனங்கள்

## 66 ஆவது நிறுவனர் நினைவுநாள் செய்தி மடல்


உழைப்பே உத்தம தொழுகை

Dec. 2019



*"எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே!"*

என்றார் தாயுமானவர். சித்தத்தைச் சிவன்பால் வைத்து முற்றும் துறந்த இவருக்கு இருந்த ஒரேயொரு ஆசை இவ்வுலகில் அனைவரும் இன்பமாக வாழ வேண்டும் என்பதுதான். ஒற்றைச் சுடருடன் பளபளக்கும் ஒரு சின்னஞ்சிறு அகல் விளக்கால் ஆயிரம் விளக்குகளுக்கு ஒளியேற்றி உயிரூட்ட முடிகிறதே! அபூர்வமாக இப்படிப்பட்ட ஒரு சிலர் காலந்தோறும் நாம் வாழும் பூமியில் பயணித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். தனக்கென வாழாது பிறர் நலத்திற்கென வாழும் இப்பெருந்தகையோரைத் "தமக்கென முயலா நோன்றாள் பிறர்க்கென முயலுநர்" எனக் குறிப்பிடும் புறநானூற்றுப் பாடல், இவர்களால்தான் இவ்வுலகம் இன்றளவிலும் அழியாது நிலைபெற்றிருக்கிறது என வியந்து கூறுகிறது. இவ்வகையில் ஏழையின் சிரிப்பில் இறைவனைத் தரிசித்த ஓர் உத்தமராம் நமது உருமு தனலெட்சுமி கல்லூரி மற்றும் பல கல்வி, சமூகநல அமைப்புகளின் நிறுவனர் ஐயா, தெய்வத்திரு. சேஷாசலம் செட்டியார் அவர்களின் 66 ஆவது நினைவுநாள் சிறப்புக் கூட்ட நிகழ்வு பற்றிய செய்திகளை உங்களுக்கு வழங்குகிறது இந்தச் செய்திமடல். நமது கல்லூரியின் 50 ஆண்டுகால வரலாற்றில் ஏதோவொரு வகையில் பயன்பெற்ற பேராசிரியர்களும் மாணவர்களும் மற்றவர்களும் நன்றியோடு நெஞ்சில் சுமந்து வந்த நினைவுகளைப் பகிர்ந்து கொண்ட ஒரு நன்னாளின் சில பதிவுகள் உங்களுக்காக!

– வாழ்த்துகளுடன், ஆசிரியர் குழு.




"விழித்திருக்கும் போதெல்லாம் உழைத்திருப்போம்! உழைத்திருக்கும் போதெல்லாம் உயர்வடைவோம்!! நாமும் வாழ்ந்து பிறரையும் வாழ வைப்போம்!!!" என்று உலகிற்கு உணர்த்திச் சென்ற நம் நிறுவனர் ஐயா அவர்களைப் போற்றி எளிய தமிழில் ஓர் இனிய கவிதாஞ்சலியை வழங்குகிறார் நமது கல்லூரியின் தமிழாய்வுத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் தே. இந்திரகுமாரி. இடமிருந்து வலமாக நமது கல்லூரியின் முன்னாள் முதல்வர் பேராசிரியர் சோ. சத்தியசீலன், கல்லூரி முதல்வர் முனைவர் முனைவர் E.R. இரவிச்சந்திரன், செயலர் உயர்திரு. கல்கி. இராமகிருஷ்ணன், சிறப்பு விருந்தினர்கள் மரு. சுரேந்திரபாபு, திருமதி மல்லிகா சுரேந்திர பாபு, கல்லூரித் தலைவர் திருமதி பத்மா இராமகிருஷ்ணன் ஆகியோர் அமர்ந்துள்ளனர்.

உருமு தனலெட்சுமி கல்விக் குழும நிறுவனரைப் போற்றி, கல்வி நிறுவனங்களை வாழ்த்திச் சிறப்புரை ஆற்றவுள்ள, திருவரங்கத்தின் புகழ்பெற்ற மருத்துவர் திரு. சுரேந்திரபாபு அவர்களுக்கு நினைவுப் பரிசினை வழங்குகிறார் கல்லூரிச் செயலர் திரு. கல்கி. இராமகிருஷ்ணன்.







பிரபல கண் மருத்துவர் மற்றும் கல்லூரி நிர்வாகக் குழு உறுப்பினர் மோதி. கிருபாசங்கர் அவர்கள் சிறப்பு விருந்தினர் பெருமைக்குரிய இதயநல மருத்துவர் திரு. சுரேந்திர பாபு அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்துக் கௌரவிக்கும் காட்சி.

தனது வெற்றிப் பாதையில் ஐம்பது ஆண்டுகளைக் கடந்து பயணித்துக் கொண்டிருக்கும் நமது கல்லூரியின் மேன்மை பொருந்திய தாளாளர் திருமதி பத்மா இராமகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையுரை ஆற்றுகிறார்.







ஏழையின் சிரிப்பில் இறைவனைத் தரிசித்த உத்தமராம், உருமு தனலெட்சுமி கல்விக் குழும நிறுவனர் தெய்வத்திரு. உருமு சேஷாசலம் செட்டியார் அவர்களது சமூகத் தொண்டினைப் போற்றிப் பாராட்டிய சிறப்பு விருந்தினரான மருத்துவர் திரு. சுரேந்திர பாபு அவர்கள், அறிவும் திறமையுமிக்க இளைய தலைமுறையை உருவாக்குகின்ற நமது கல்லூரி நிர்வாகம் மற்றும் முதல்வர், பேராசிரியப் பெருமக்களுக்குத் தனது வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறார்.

"மனிதராய்ப் பிறந்தவர்களுக்குத் தனது கடமையும் நேர்மையும் இரு கண்களாய்த் திகழ வேண்டும்" என்று உணர்த்திய நம் கல்லூரியின் மேனாள் முதல்வர் பேராசிரியர் சோ. சத்தியசீலன் அவர்கள் தனது பணிக்கால அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட அருமையான காட்சி.







இன்றைய இளைய தலைமுறையினர் உயர்கல்வி கற்பதுடன் சிறந்த விவசாயத்திலும் ஈடுபட்டால்தான் இனிவரும் காலங்கள் பசுமை பாரதத்தைக் காண இயலும் என வலியுறுத்தி உரையாற்றுகிறார் மருத்துவர் திருமதி மல்லிகா சுரேந்திர பாபு அவர்கள்.













ஒவ்வொரு மனிதரும் சிறந்த கல்வியினைப் பெற்றாலொழிய வலிமையான தேசத்தை உருவாக்க இயலாது என்றெண்ணிய நம் நிறுவனர் தெய்வத்திரு. உருமு சேஷாசலம் செட்டியாரின் கல்வி நிறுவனங்களாகிய பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் புரிந்த பற்பல சாதனைகளைப் பாராட்டி அவர்களது திறமைகளை அங்கீகரித்துப் பரிசுகள் வழங்கப்பட்டன.

